| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>தெய்வாணையம்மாள் | OS.241/22 | 12.10.2023 |

PW 1 குறுக்கு விசாரணை

நான் வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் நான் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கின் எண்ணான அ.வ.எண்.576/82 ஐ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கின் எண் எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மேல்முறையீட்டு விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை எனது மகனை தான் கேட்கவேண்டும். வழக்கு சொத்தை வாங்கியதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நியாபகம் இல்லை. எனது இடத்திற்கு 2 அடி கீழ் பள்ளமாக பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து முள்ளுக்காடு புதராக உள்ளது என்றால் சரிதான் தரிசாக உள்ளது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 பட்டாவானது கூட்டுரிமையின் அடிப்படையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் செல்லையா பெயரில் வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமானது வழக்கிற்காக தான் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 2018 ம் ஆண்டு சுவாதீனம் எடுக்கப்பட்ட பின்பு வழக்கு சொத்திற்கு நாங்கள் போகவில்லை என்றால் அவ்வப்போது சென்று வருவோம். அங்கு பேருந்து வசதி இல்லாததால் அங்கு குடியில்லை. 1ம் பிரதிவாதியின் ஒரு மகனுக்கு கண்பார்வை தெரியாது

என்றும் மற்றொரு மகன் நடக்கமுடியாமல் ஊனமுற்றவராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதியால் நடக்கமுடியாது என்றும், மூன்று சக்கர வாகனத்தில் தான் சென்று வருவார் என்றால் அவர் நடப்பார். பிரதிவாதிகள் எனது சுவாதீனத்தில் பிரசச்னை செய்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் உள்ளது. ஆனால் தாக்கல் செய்யவில்லை. ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கான காரணம் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் எங்களிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றும் நாங்கள் தான் அவர்களது இடத்தை அபகரித்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த விபரத்தை தெரிந்து கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்லையா உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு வழக்கு சொத்தின் அளவீடுகள் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஒருபோதும் குடியிருந்ததில்லை என்றும் பிரதிவாதிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு ஆவணங்களை வழக்கிற்காக தயாரித்து உள்ளேன் என்றால் சரியல்ல.